REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

ஒரே ஆண்டில் பல மகசூல்கள்!

அணுசக்தி இயக்கும் அற்புத மாறுதல்கள்!

அணு சக்தியின் உதவியால் நிலத்தை உஷ்ணப்படுத்தி ஒரே ஆண்டில் பல மகசூல்களை எடுக்க ரஷ்யா திட்டமிட்டுள்ளதாக அறியக் கிடக்கிறது.

அணுசக்தியை நிர்மாண வேலைகளில் பயன்படுத்துவது பற்றி ஆராய்ச்சி செய்தால், சில நிமிட நேரங்களில் பிரும்மாண்டமான கால்வாய்களைத் தோண்டிவிட முடியுமாம்! இவற்றினுதவியால் பனிப் பிரதேசங்களும் மறைந்துவிடுமாம்!

மலர் 2] சென்னை: மாசி 19உ வியாழன் (3—3—55) ★ ★ வெளியூர்: மாசி 20உ வெள்ளி (4—3—55) [இதழ் 223

இந்தியப் பேரரசின் ஓரவஞ்சனை அம்பலம்!

'சென்னைக்குக் கிடைக்காத சலுகை மற்ற மாநிலங்களுக்கு கிடைக்கிறது'

வரி விதிப்பில் சென்னை அரசாங்கத்தின் முறைகேடு

மேல் சபையில் டாக்டர் லட்சுமணசாமியின் கருத்துரை

"புதிய வரிகளைக் கொண்ட துண்டு விழும் வரவு-செலவு திட்டத்தை நிதி அமைச்சர் தந்துள்ளார். துண்டு விழும் வரவு-செலவு திட்டங்களை மற்ற மாநில அரசாங்கங்களும் தந்துள்ளன; அவைகளில் பல சென்னையைக் காட்டிலும் அதிகமாகத் துண்டு விழுந்தும் உள்ளன; ஆனல் அதற்காக அவைகள் புது வரிகள் போடும் முயற்சியில் ஈடுபடவில்லை. வரிகளைக் கூட்டிச் செல்லும் பரம்பரை பழக்கத்தில் பற்றுக்கொண்டதாக சென்னை இப்பொழுதும் இருந்துவருவதுடன், அதனுடைய 'கணக்குத்துறை நிபுணத்துவம்' ஒவ்வொரு ஆண்டும் புது வரிகளைப் போடவும் உதவி செய்கிறது!"

"வரவு-செலவு திட்டத்தில் துண்டு விழுவதைத் தொற்று நோயாகக் கொண்டுள்ள மற்ற மாநில அரசாங்கங்கள் இந்தியப் பேரரசிடமிருந்து நற்சலுகைகளைப் பெற்று வருகின்றன. இந்தியப் பேரரசின் உதவி, குறிப்பிட்ட கோட்பாட்டையோ — விஞ்ஞான அடிப்படையையோ கொண்டு செயலாற்றப்படுவதில்லை என்ற கருத்தை நான் இப்பொழுதும் கொண்டிருக்கிறேன்."

இவ்வாறு மேல்சபையில் எதிர்க்கட்சித் தலைவரான டாக்டர் ஏ இலட்சுமணசாமி அவர்கள் விளக்கம் தந்துள்ளார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது:—

"வரி கொடுக்க சக்தி உள்ளவர்கள் மீது நியாயமான அடிப்படையில் வரி விதித்து, அப்படி வசூலிக்கப்படும் வருமானத்தை சிக்கனமாகவும் திறமையாகவும் கூடுமானவரை உயர்ந்த அளவு நலம் செய்யும் முறையில் செலவழிப்பதை உள்ளடக்கமாகக் கொண்ட எந்த வரி விதிப்பையும் நான் எதிர்ப்பவன் அல்ல. இவ்விருவகைகளிலும், சென்னை வரவு - செலவு திட்டம் குறைபாடுகள் நிரம்பியதாக இருக்கிறது.

வரி விளைவுகளைக் குறித்தோ அல்லது புதுவரிகள் போட நினைப்பதற்குமுன் வரிச்சுமை எவ்வகையில் பகிர்ந்துச் சுமத்தப்பட்டுள்ளது என்பது பற்றியோ, ஒழுங்காகக் கண்டறியப்படவில்லை என்றே அஞ்சுகிறேன்.

"ஒரே ஒரு இனம் நீங்கலாக, மற்ற வரி விதிப்பு இனங்கள் அனைத்தும் விவசாயிகளையே குறி வைத்திருக்கிறது.

விவசாயியின் வரிச் சுமையைக் கூட்டும் வகையில் ஒரே ஆண்டில் நான்கு வரி ஏற்பாடுகள் நிறைவேற்றப்பட்டுள்ளன அல்லது நிறைவேற்றப்பட உள்ளன. பொன் முட்டைகளையே மேலும் வாத்து இட்டுக்கொண்டு இருக்கும் என நிதி அமைச்சர் கற்பனை செய்துகொண்டு இருக்கிறாரா?"

அதிகாரம் கோருகிறார்

மக்கள் சபையில், வர்த்தக மந்திரியான டி. பி. கார்மார்க்கர் சில அத்தியாவசியப் பொருள்கள், உற்பத்தி செய்ய, விநியோகிக்க, வர்த்தகம் செய்ய, ஆகியவற்றிற்கான அதிகாரம் கோரும் மசோதா ஒன்றைப் பிரரேபித்துள்ளார் என்று தெரிகிறது.

அவர்களுக்கும் அதிருப்தியாம்!

"இலங்கை—இந்தியா ஒப்பந்தத்தை இலங்கை அமுல் செய்யும் முறை, இந்தியாவுக்கு திருப்தியைத் தரவில்லை," என்று டெல்லி மேல்சபையில் உதவி வெளிநாட்டிலாகா மந்திரி ஏ. கே. சந்தா குறிப்பிட்டிருந்தாரல்லவா!? (விவரம் 3-ம் பக்கத்தில் வெளியாகியுள்ளது.)

அதற்குப் பதிலளிக்கும் வகையில், "இந்தியா அந்த ஒப்பந்தத்தை அமுல் செய்யும் முறை எங்களுக்கும் அதிருப்தியையே தந்திருக்கிறது" என்று இலங்கை வெளிநாட்டிலாகா அலுவலக அதிகாரி ஒருவர் குறிப்பிட்டிருக்கிறார்

"இலங்கையில் உள்ள இந்தியர்களை, இந்திய சர்க்கார் தூதுவராலயம், 'இந்தியர்கள்' என்று பதிவு செய்துகொள்வதில் மிக காலதாமதப்படுத்துகிறது என்பதும் இதற்கான காரணங்களில் ஒன்றாகும்," என்றும் அந்த இலங்கை அதிகாரி குறிப்பிட்டிருக்கிறாராம்.

இரண்டாவதாக, ஒப்பந்தப்படி இலங்கைக்குத் தேவையான விஷயங்களை அறிவிப்பதில் இந்தியத் தூதுவராலயம் சரிவர ஒத்துழைப்பதில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

எவ்வளவு மகத்தானது

சென்னை சர்க்கார் கடந்த 1953—54-ம் ஆண்டில், பல்வேறு மாவட்ட ஆட்சி மன்றங்கள், நகர சபைகள் பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றிற்கு பிரசவ விடுதிகள், குழந்தை நலப் பாதுகாப்பு முகாம்கள் அமைப்பதற்காக ரூ. 96,590-மானியம் வழங்கியிருப்பதாகத் தெரிகிறது.

'இராமாயணங்களுக்கு இனி இடமில்லை!'

'தமிழகத்தின் எதிர்காலம் புதுமைக் கருத்துக்களுக்கே'

டாக்டர் சோமசுந்தர பாரதியார் கண்டிப்பு

"வடமொழியில் வான்மீகி இயற்றிய இராமாயணத்திற்கோ, தமிழில் கம்பன் இயற்றிய இராமாயணத்திற்கோ, நிச்சயமாக, வருங்காலத் தமிழகத்தில் இடமிருக்காது; அவைகளை அதன் ஆசிரியர்களே படித்துக்கொள்ள வேண்டியதுதான். இனி, காலத்திற்கேற்ற புதுமைக் கருத்துக்களையே கவிஞர்கள் எளிய நடையில் பாட வேண்டும்; அவர்களே புகழ் பெறுவர்."

இவ்வாறு, 27-2-55ல் நடைபெற்ற திருச்சி மாவட்டம் துறையூர் பொருநிலக்கிழார் உயர்நிலைப்பள்ளி இலக்கியக் கழக ஆண்டு விழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில், டாக்டர் எஸ். சோமசுந்தர பாரதியார் அவர்கள் குறிப்பிட்டார்.

தப்புக் கணக்கு போட்ட தலைமை

ஆந்திர தேர்தலில் கம்யூனிஸ்டுகள் தோல்வியுறுவது ஏன்?

"ஆந்திர தேர்தலைப் பற்றி நாங்கள் கொண்டிருந்த மதிப்பீடு தவறானது,"

என்று ஆந்திர கம்யூனிஸ்டு கட்சி பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

இதுவரை அறிவிக்கப்பட்டுள்ள முடிவுகளில் தங்களுக்குப் படுதோல்வி ஏன் என்பதுபற்றி ஆராய்வதற்காக, கட்சி கூடி அந்த அறிக்கையைத் தயாரித்ததாம்.

"விவசாயத் தொழிலாளர்களும்,

(4-ம் பக்கம் பார்க்க)

இந்தியாவில் அந்தோனி ஈடன்

இங்கிலாந்து வெளிநாட்டு மந்திரி

புதுடில்லி, மார்ச், 2—

இங்கிலாந்து வெளிநாட்டிலாகா மந்திரி சர் அந்தோனி ஈடன் தமது துணைவியாருடன் விமான மூலம் இங்கு வந்து சேர்ந்தார்.

அவர் இந்தியப் பிரதமர் நேருவுடன் இரண்டு நாட்கள் பேச்சு வார்த்தைகள் நடத்துவார் என்று தெரிகிறது.

"நாங்கள் பல விஷயங்கள் குறித்துப் பேசுவோம்—உற்சாக மூட்டக்கூடிய பலனுடையனவாக எங்கள் பேச்சுக்கள் இருக்குமென நம்புகிறேன்," என்று விமான நிலையத்தில் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

'நெய்வேலித் திட்டத்தை சென்னை நடத்தவேண்டும்'

'இந்திய அரசாங்கம் நடத்துவதானல் இலாபத்தில் கால் பங்கே பெற வேண்டும்'

'ஐந்தாண்டு திட்டம் சிந்திக்கப்படுவதற்கு முன்னரே சென்னைத் திட்டங்கள் துவங்கப்பட்டன'

சென்னை சட்டசபையில் தோழர் தெய்வசிகாமணி அறைகூவல்

"ஏதாவது திட்டங்களை நிறைவேற்ற சென்னை அரசாங்கம், இந்தியப் பேரரசை உதவிக்காக எப்பொழுதும் அணுகுகிறது ஆனல் இந்திய அரசாங்கமோ வடக்கிற்குப் பற்றுதல் காட்டி, அடுத்தடுத்து சென்னை அரசாங்கத்தின் கோரிக்கையை மறுத்துவிடுகிறது. சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை துவங்குவதில் இந்திய அரசாங்கம் கொண்டுள்ள போக்கே இதற்குப் போதிய எடுத்துக் காட்டாகும்."

"நெய்வேலி நிலக்கரி திட்டத்தில் கிடைக்கின்ற இலாபத்தில் பெரும் பகுதியைப் பெற சென்னை அரசாங்கத்துக்கு உரிமை உண்டு. திட்டத்திற்குத் தேவைப்படும் ரூ. 56 கோடி மூலதனத்தை சென்னை அரசாங்கத்திற்குக் கடனாகக் கொடுத்து அதன் வட்டியை மட்டுமே அடைய இந்திய அரசாங்கம் முன்வரவேண்டும். இல்லையேல், திட்டத்திற்குத் தானே முதலீடு செய்து, கிடைக்கும் இலாபத்தில் கால் பகுதியை இந்திய அரசாங்கம் வாங்கிக்கொள்ளச் சம்மதிக்க வேண்டும்."

—இவ்வாறு, செங்கற்பட்டு மாவட்ட காஞ்சிபுரம் தொகுதி சட்டசபை உறுப்பினரான எஸ். தெய்வசிகாமணி அவர்கள் சட்டசபையில் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறி இருப்பதாவது:—

"முதல் ஐந்தாண்டு திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள பல பெரும் திட்டங்கள் முடிந்துவிட்டன அல்லது முடியும் கட்டத்தில் இருக்கின்றன என தனது பேச்சில் நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

"ஆனல், பெரும்பான்மையான திட்டங்கள், ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய நினைவு ஏற்படுவதற்கு முன்னதாகவே சென்னை அரசாங்கம் மேற்கொண்டுள்ளவைகளாகும்."

"இந்திய அரசாங்கத்திடமிருந்தும் பொது மக்களிடமிருந்தும்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 3-3-1955 வியாழன்

அதிகரித்துவரும் வரிச் சுமை!

சென்னை அரசாங்கம் தனது 1955—56-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் புதிய வரிகள் இரண்டு விதித்திருக்கிறார்கள்.

ஏழை விவசாயி, பெரும் பண்ணைக்காரர் என்ற வேறுபாடின்றி, எல்லோருக்கும் நஞ்செய், புஞ்செய் என்ற பாகுபாடின்றி எல்லா நிலங்களுக்கும் நீர்க்கூலி உட்பட உள்ள தீர்வையில் எட்டில் ஒரு பங்கு (ரூபாய்க்கு இரண்டணா விதம்) உபரி வரி விதிப்பது என்றும், மலிவான சிகரெட், பீடி, சுருட்டு போன்ற புகையிலைப் பொருள்களுக்கு விற்பனை வரி விதிப்பது என்றும் வரவு-செலவுத் திட்டம் கூறுகிறது.

நிலவரியின் மீது விதிக்கப்பட இருக்கிற உபரி வரி, ஏழை விவசாயிகளைப் பெரும் அளவு பாதிக்கும் என்பது நாடறிந்த ஒன்றாகும்; அதுவும் விவசாயப் பொருள்களின் விலை விழ்ந்துகொண்டு வருகிற நேரம் இது! இந்த விலை விழ்ச்சியினால் ஏற்கனவே தங்களுக்கு ஏற்பட்டுள்ள பெரும் நஷ்டத்தைக் கண்டு ஏழை விவசாயிகள் கண் கலங்கி நிற்கிறார்கள் என்றாலும், அது மிகையாகாது. அந்த நிலையில், வரும் ஆண்டில் தாங்கள் செலுத்தும் நிலவரி மீது உபரி வரி விதிக்கப்படுகிறது என்பது கண்டு, ஏழை விவசாயிகள் பெரும் அதிர்ச்சி அடைவர்.

நிதி மந்திரி கனம் சுப்பிரமணியம் அவர்கள், இது குறித்து சட்டசபையில் பேசுகையில், இந்த உபரி வரியின் மூலம் கிடைக்கும் தொகையை மாவட்ட ஆட்சி மன்றங்களுக்குத் தந்துவிடப் போவதாகக் கூறி, சமாதானம் பெற வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்.

இப்போதுதான்—சமீபகாலமாகத்தான், 'தங்கள் தங்கள் கிராமத்திற்கும் நல்ல சாலை வசதிகள் வேண்டும்,' என்ற எண்ணம் கிராம மக்களிடையே அரும்பி வருகிறது; அதுவும் நல்லசாலைகள் தங்களின் அன்றாட வாழ்வில் தாங்கள் தொடர்பு கொள்ள வேண்டியிருக்கிற இடங்களுக்கு மிக அவசியமானவை என்ற எண்ணம் விவசாயப் பெருமக்களிடத்தில் ஏற்பட்டிருக்கிறது. 'சாலைகள் அமைப்பதற்காகத்தான் புதிய வரி விதிக்கப்படுகிறது,' என்று கூறப்படுமானால், 'சாலைகளே வேண்டாம்; வரிச் சுமை தரும் கொடுமை அகன்றால் போதும்,' என்ற எண்ணம்தான் அவர்களிடை முளைவிடும். மீண்டும் அவர்கள், 'நல்ல சாலைகளாவது, தேவையாவது—இருக்கிற மேடு பள்ளங்கள் நிறைந்த வண்டிப் பாதையே போதும்,' என்ற நிலைக்குப் பின்னோக்கிச் சென்று விடுவர்.

எனவே, நிலவரியின் மீது விதிக்கப்பட திட்டமிடப்பட்டுள்ள உபரி வரி, எந்த வகையிலும் நியாயமானதல்ல!

'விதிக்கத்தான் வேண்டும்-வேறு வழியில்லை,' என்று கருதினால், வரி தருவதற்கு யார் வசதியும், வளமும் உடையவர்களோ, அவர்களிடம் அந்த வரியை வசூலிக்க வேண்டுமே தவிர, ஏற்கனவே வரிச் சுமையால் வளைந்துள்ள தனது வறுமை மிகுந்த வாழ்வை நிமிர்த்த முடியாமல் தவிக்கும் ஏழை எளியவர்களிடமிருந்தல்ல!

உயர்ந்த வாழ்வும், நிறைந்த செல்வமுங் கொண்டோரிடமிருந்து அதிகமான வரி பெறுவதுதான், சமுதாயத்திலே சமத்துவத்தை — சமதர்மத்தை சமாதானமாகவே நிலைநாட்ட எடுத்துக் கொள்ள வேண்டிய அடிப்படை முயற்சிகளில் ஒன்றாக இருக்கவும் முடியும்.

அதை விடுத்து, 'ஏழை விவசாயிகளும் உபரி வரி தர வேண்டும்' என்பது நியாயமல்ல! அந்த உபரி வரி விதிப்பதற்கு, வரம்பு நிர்ணயிக்கலாம். உதாரணமாக, 50 ரூபாய்க்கு மேல் ஆண்டொன்றுக்கு நிலத் தீர்வை செலுத்துபவர்கள் இவ்வளவு வரிச் செலுத்த வேண்டும் என்று நிர்ணயிக்கலாம்; அதிலும், அந்த 50 ரூபாய் வரி செலுத்துபவர்கள், விவசாயமன்னியில் வேறு தொழில்கள், வியாபாரம், உத்தியோகம் போன்றவை மூலம் வருமானமுடையவர்களா என்பதையும் கணக்கிலெடுத்துக்கொள்ள வேண்டும்.

எனவே, சர்க்கார் புதிதாகக் கொண்டுவருகிற நில உபரி வரியை ரத்து செய்ய வேண்டும் எனக் கோருகிறோம்.

அடுத்து, மலிவான சிகரெட், பீடி, சுருட்டு முதலிய புகையிலைப் பொருட்களுக்கு விற்பனை வரி விதிப்பது என்பதும் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

மலிவான பொருட்கள் என்றாலே, அவை, 'ஏழை மக்கள் உபயோகிப்பவை,' என்பது சொல்லாமலே விளங்கக்கூடிய ஒன்று.

'இந்த வரி விதிப்பு, பீடி, சிகரெட் பிடித்து ஏழை மக்கள் தங்கள் உடல்நலத்தைக் கெடுத்துக்கொள்ளக் கூடாது என்பதற்காகவேதான்,' என்று கூட ஆட்சியாளர்கள் கூறக்கூடும். உண்மையில் காங்கிரஸ் ஆளவந்தார்களுக்கு அந்த எண்ணம் இருக்கும் என நம் எதிர்பார்க்கவில்லை. அப்படி இவர்கள், ஏழை மக்களின் உடல் நலத்தில் அக்கரை கொண்டவர்கள்தான் என்பது உண்மையானால், அதற்காக, அந்தப் பொருள்களையே உபயோகிக்கக்கூடாது என தடை விதித்துவிடலாம்—மதுவிலக்கு செய்திருப்பதுபோல! அதை விடுத்து, பீடி, சுருட்டு முதலியவைகளை நாட்டில் விற்பனை செய்ய அனுமதித்து விட்டு, அவற்றிற்கு விற்பனைவரி விதிப்பதின் மூலம், அப்பொருள்களின் விலையை அதிகரிப்பது, ஏழைகளை — சாதாரண மக்களைப் பெரிதும் பாதிக்கக்கூடியதாகும்.

அதுவும், இந்த நாட்டில், மலிவான சிகரெட்டுகளையும், பீடி, சுருட்டுகளையும் உபயோகிப்போர், ஏதோ ஆடம்பரத்திற்காக அவற்றைப் பிடிப்பவர்கள் அல்லர்; மாறாக, தங்களை வாட்டும் பசியை மறக்கும் மயக்க மருந்தாக—மாற்றுப் பொருளாகத்தான் அவற்றை உபயோகிக்கிறார்கள்!

அப்படியிருக்கையில், அவர்களைப் பாதிக்கக்கூடிய வகையில் புகையிலைப் பொருள்களுக்கு விதிக்கத் திட்டமிடப்பட்டிருக்கும் விற்பனை வரியையும் ரத்து செய்ய வேண்டும் என்று நாம் வற்புறுத்துகிறோம்.

'இந்த வரியையும் விதித்துத்தானாக வேண்டும்; வேறு வழியில்லை,' என்று ஆட்சியாளர்கள் கருதுவரேயானால், புகையிலைப் பொருள்களில் மிக உயர்ந்தரக சிகரெட்டுகளுக்கு, இப்போது விதிக்கப்படும் விற்பனை வரியை இரட்டிப்பதின் மூலமோ அல்லது அதிகப்படுத்துவதின் மூலமோ அந்த வரியை வசூலிக்கலாம். ஆடம்பரத்திற்காகவும், உல்லாசத்திற்காகவும் புகை பிடிக்கும் கனவான்களின் 'கன'மான பணப்பையை, இந்த அதிக வரி எந்த வகையிலும் பாதித்துவிடாது.

எனவே, இந்த ஆண்டில் சென்னை சர்க்கார் புதிதாகக் கொண்டுவந்துள்ள இரண்டு வரி விதிப்புகளும், ஏற்கனவேயுள்ள வரிச்சுமையை அதிகரிப்பனவாக உள்ளதால் அவற்றை கைவிட வேண்டும் என்று வற்புறுத்துகிறோம்.

இந்தியில் வரவு-செலவுத் திட்டம்

முதன் முறையாக இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட விபரங்கள் இந்தி மொழியிலும் தயாரிக்கப்பட்டு உறுப்பினர்களுக்குத் தரப்பட்டதாம்.

'குறைபாடுகள்' இந்த முதன் முயற்சியில் தவிர்க்க முடியாது போய்விட்டன என்றும், எனெனில், வரவு-செலவுத் திட்ட விபரங்களில் பல, குறிப்புச் சொற்களாயிருந்தனவென்றும், இதனை அங்கத்தினர்கள் பொறுத்துக் கொள்ளவேண்டும் என்றும் நிதி மந்திரி கேட்டுக்கொண்டாராம்!

இந்தியாவில் நடப்பு பருவத்தில் 1955 ஜனவரி 31-ந் தேதி வரை உற்பத்தியான சர்க்கரையின் மொத்த அளவு சுமார் 6½ லட்சம் டன்னாகும்.

ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்த நாட்டிலே!

ஆர்ப்பாட்டம் நடத்திய 4,000 பெண்களின் உரிமைக் குரல்

கல்கத்தா சட்டசபையின் முன்பு நடைபெற்ற சம்பவம்

கல்கத்தா, மார்ச். 1—

ஆண்களைப் போலவே தங்கட்கும் சம அந்தஸ்தும், உத்தியோகமும் தேவை எனக் கோரி மேற்கு வங்க சட்டசபைக்கு முன்பு சுமார் 4000 பெண்கள் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

32000 பெண்கள் கையொப்பமிட்ட கோரிக்கை மனு ஒன்றையும் அவர்கள் தாங்கியிருந்தனர் என்று தெரிகிறது.

சட்டசபையில் முதன் மந்திரியைச் சந்தித்து அந்த மனுவைத் தந்து தங்கள் கோரிக்கைகளை வெளியிட அவர்கள் எண்ணினர். ஆனால் முதன் மந்திரி அவர்களை சட்டசபையில் பார்க்க முடியாதெனவும், மார்ச் 9-ந் தேதியன்று சர்க்கார் காரியாலயத்தில், அந்த பெண்களின் பிரதிநிதிகள் தன்னைப் பேட்டி காணலாமெனவும் கூறிவிட்டாராம்.

அணுகுண்டுகளைத் தடை செய்ய வேண்டுமென்ற ஜப்பானிய தாய்மார்களின் கோரிக்கைக்கு, இந்த ஆர்ப்பாட்டம் நடத்திய பெண்கள் ஆதரவு தெரிவித்திருந்தனராம்.

சட்டசபைக்கு வருமுன்பொதுக் கூட்டம் ஒன்று நடத்திவிட்டு ஊர்வலமாக, பெண்கள் வந்தனர் என்று தெரிகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வதற்காக வந்த 125 பெண்கள் டிக்கெட் இன்றி இரயிலில் பிரயாணம் செய்தமைக்காகப் போலீசாரால் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிய வருகிறது.

கூட்டுறவு விவசாயப் பண்ணை

துவக்க சென்னை சர்க்கார் திட்டம்

சென்னை, மார்ச் 2—

திருநெல்வேலி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் வட்டம், மணக்கரை கிராமத்தில் சுமார் 600 ஏக்கர் நிலத்தில் கூட்டுறவு விவசாயப் பண்ணை ஒன்றை நிறுவுவதற்கான திட்டமொன்றை சென்னை அரசாங்கம் பரிசீலித்து வருவதாகத் தெரிகிறது.

இந்த நிலம் தனிப்பட்டவர்களிடமிருந்து சுமார் 20 ஆண்டு காலத் திற்குக் குத்தகை எடுத்துக் கொள்ளப்படுமாம்.

முதன் முதலில் சுமார் 20 விவசாயிகளை இந்தப் பண்ணையின் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்வதெனவும், பின்னர் படிப்படியாக இந்த எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வது என்றும் சொல்லப்படுகிறது.

இங்கு சுமார் 60 ஆயிரம் ரூபாய் மூலதனச் செலவில் 'பம்ப் செட்'டுகள் அமைப்பது என்றும், விவசாயச் செலவுக்காக ஆண்டுதோறும் ரூ. 30,000 செலவாகும் என்றும், மதிப்பீட்டின்படி திட்டமிடப்பட்டுள்ளதாம்.

அமைக்கப்படுகிற கூட்டுறவுச் சங்கம் தனது சொந்தச் செலவில் விவசாயத்தை மேற்கொள்ளும். விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்கு நியாயமான கூலி தரப்படும் என்றும் அறியக்கிடக்கிறது.

இந்தத் திட்டத்தை சீக்கிரமே அமுல் செய்வது பற்றி மாவட்ட அதிகாரிகளுடன் மாநில கூட்டுறவு அதிகாரி கலந்தாலோசித்து வந்துள்ளதாயும் தெரியவருகிறது.

பிரிவினை காரணமாக பாகிஸ்தான் தரவேண்டிய ரூ. 8 கோடி கடன் பாக்கி இன்னும் தீரவில்லை என்று நிதி மந்திரி தேஷ்முக் தனது வரவு-செலவுத் திட்டச் சொற்பொழிவின்போது குறிப்பிட்டிருக்கிறார்.

சென்னை சட்ட சபையில்...

சர்க்கார் லாரிகள் விற்பனை

ஆவடி காங்கிரசுக்கு நான்கு லாரிகள் சுமார் ரூ 22,000-த்திற்கு விற்கப்பட்டன; பின்னர், எட்டு சிவில் சப்ளை இலாகா லாரிகளை அரசாங்கம் ஏலத்தில் விற்றது; இந்த எட்டு லாரிகளுக்கும் கிடைத்தது, ரூ. 18,249—15—0 தான் என்றும், எல்லா இலாகாக்களையும் கலந்து கொண்ட பிறகுதான் இவை விற்கப்பட்டனவென்றும் மந்திரி பக்தவத்சலம் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

இலவச பகல் உணவா?

"அரிசன தொழில் பள்ளிகள் நீங்கலாக, இதர பள்ளிகளில் படிக்கும் அரிசன மாணவர்களுக்கும் இலவச பகல் உணவு அளிக்க அரசாங்கத்திடம் திட்டமுண்டா?" என்ற கேள்விக்கு, 'இல்லை' என்று மந்திரி பரமேசுவரன் கூறினார்.

அதிகம் செலவாகுமே!

"போலீஸ் நாய்களை இதர மாவட்டங்களிலும் உபயோகிக்க முடியுமா?" என்ற கேள்விக்கு, நிதி மந்திரி பதிலளிக்கையில், இந்தத் திட்டத்தினால் அதிகம் செலவாகுமென்றும், போதுமான நாய்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்ட பின்னர், மற்ற மாவட்டங்களில் அமுல் நடத்த யோசிப்பதாகவும், ஆனால், தாலுகா பகுதிகளுக்கெல்லாம் இத்திட்டம் அசாத்தியமானதென்றும் கூறினார்.

"போலீசார் செய்யும் குற்றங்களையும் நாய்கள் கண்டுபிடிக்குமா?" என்ற கேள்விக்கு, அமைச்சர், குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் இந்த நாய்களுக்கு வித்தியாசமே இல்லையென்றும், எல்லாக் குற்றங்களையுமே கண்டுபிடிக்குமென்றும் கூறினார்.

"இந்த நாய்களுக்குச் செலவிடும் தொகை, போலீசாருக்குத் தரப்படும் சம்பளத்தைவிட அதிகமானதா?" என்ற கேள்விக்கு, அமைச்சர், இதுபற்றிய தகவல் தம்மிடம் இல்லையென்று கூறினார்.

தோழர் நெடுஞ்செழியன் கருத்துக்கு நீதிபதி ஏ. எஸ். பி. அய்யர் ஆதரவு

சென்னை, பிப். 28—

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், நேற்று காலை 9 மணியளவில் வாகினி ஸ்டுடியோவில், 'எனெஸ்கே' படத் தயாரிப்பாளர்களின் 'படித்த முட்டாள்' என்ற படத்தின் ஆரம்ப விழாவை நடத்தி வைக்கும்போது குறிப்பிட்டதாவது:—

"சினிமாப் படம், வெறும் பொழுது போக்குக்காக மட்டுமோ, அல்லது கலை கலைக்காகவே என்பதற்காக மட்டுமோ, அல்லது வெறும் கருத்துக்களை பரப்பும் சாதனமாக மட்டுமோ பயன்படுத்தப்படக் கூடாது; எப்படி வெற்றிலை, பாக்கு சுண்ணாம்பு மூன்றும் ஒன்றாக—ஒரு அளவுடன் சேரும்போது தான் சுவையும் பலனும் கிடைக்கிறதோ, அப்படித்தான் சினிமாவிலும், பொழுது போக்கு, கலை, கருத்து ஆகிய அம்சங்கள் அளவுடன் இணைந்தால் சுவையும் பலனும் மிக்கதாயிருக்கும்; கருத்துக்களைச் சொல்லும்போது, நாட்டுக்குத் தேவையான நல்ல கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்பது என் ஆசை," என்றார்.

பின்னர் பேசிய உயர்நீதி மன்ற நீதிபதி ஏ. எஸ். பி. அய்யர் அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"எனக்கு முன் பேசிய நெடுஞ்செழியன் குறிப்பிட்டது போல, கலை, கருத்து, பொழுதுபோக்கு ஆகியவை அளவுடன் இணைந்திருக்க வேண்டும்; சொல்லப்படுகிற கருத்து முதலாளித்துவக் கருத்தோ, அல்லது கம்யூனிஸ்டு கருத்தோ, அல்லது திராவிடர் கருத்தோ, எதுவாயினும், அளவுடன் இணைந்து நின்றால், சினிமா பயனுடையதாகவே இருக்கும்; நெடுஞ்செழியன் அவர்கள் அதனை நல்ல உதாரணத்துடன் விளக்கினார்," என்றார்.

இலங்கை போக்கு: இந்தியா அதிருப்தி

"1954-ம் ஆண்டில் ஏற்பட்ட இந்தியா—இலங்கைஒப்பந்தத்தை இலங்கை சர்க்கார் அமுல் நடத்தும் முறை இந்திய சர்க்காருக்குப் பூரணமாகத் திருப்தி அளிக்கவில்லை"

என்று, மக்கள் சபையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், வெளிவிவகார துணை அமைச்சர் கூறினர்.

இடையில் குறுக்கிட்டு, பண்டித நேரு, லண்டனில் இப்பிரச்சினை பற்றி இலங்கைப் பிரதமருடன் கலந்து பேசவில்லையென்றும், பின்னர் அவருக்கு ஒரு கடிதம் எழுதியிருப்பதாயும் தெரிவித்தார்.

1955-ம் ஆண்டு ஒப்பந்தம், 'பிரச்சினையைத் தீர்க்கும் என்ற நம்பிக்கையில் செய்து கொள்ளப் படவில்லையென்றும், 'பிரச்சினை தீருவதற்கு அடிகோலும்,' என்று நம்பப்பட்டதாகவும் அவர் கூறினர்.

"அக்டோபர் முதல் இதுவரை, 6,000 மனுக்களில் ஒன்றுதான் ஏற்கப்பட்டதா?" என்ற கேள்விக்கு, துணை மந்திரி, "நவம்பர் மாதம், 2,900 மனுக்களில் 7 நபர்களுக்கான மனுக்கள்தான் ஏற்கப்பட்டது," என்று குறிப்பிட்டார்.

இந்தியாவில் உற்பத்தியாகும் கரும்பில், சுமார் 25 சதவிகிதம் அஸ்கா சர்க்கரை உற்பத்திக்கும், 55 சதவிகிதம் வெல்ல உற்பத்திக்கும், 3 சதவிகிதம் கண்ட்சாரி வெல்ல உற்பத்திக்கும் பயன்படுத்தப்படுகிறது.

'வகுப்புப் பிணக்கைத் தீவிரமாக்கும்!'

'ஆட்சேபணைக்குரிய பேச்சு'

கவர்னர் மீது எதிர்க் கட்சியினர் குற்றச்சாட்டு

கண்டிக்கும் கருத்துடன் சபையை விட்டு நீங்கினர்

சாந்திகர், மார்ச் 1—

"வகுப்புப் பிணக்கை விரிவாக்கக்கூடியது."

"ஆட்சேபகரமானதும் விரும்பத்தகாததும் ஆகும்."

—இவ்வாறு, முறையே கம்யூனிஸ்டு கட்சியினரும், அகாலிகளும், பஞ்சாப் கவர்னர், ஜலந்தர் கிராமமொன்றில் பேசிய பேச்சைக் குறித்து, சட்டசபையில் வெளிப்படையாகக் கூறியுள்ளனர்.

பஞ்சாப் சட்டசபையின் வரவு-செலவு திட்டக் கூட்டம் இன்று மாலை இங்கு துவங்கியது. துவக்கப் பேச்சை கவர்னர் பேச இருந்தார்; அதற்காக இருசபை உறுப்பினர்களும் ஒருங்கே கூடியிருந்தனர்; கவர்னர் பேச எழுந்ததும், எதிர்க் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வெளியேறிவிட்டனர்.

ஜலந்தர் மாவட்டத்தின் கிராமம் ஒன்றில் சென்றவார இறுதியில் கவர்னர் ஆற்றிய சொற்பொழிவு, இருந்தவரும் வகுப்புப் பிணக்கைத் தீவிரமாக்கக்கூடியதாகவும், விரும்பத் தகாத ஆட்சேபணைக்குரிய பேச்சாகவும் இருப்பதாக எதிர்க் கட்சியினர் எடுத்துக் கூறி, அதைக் கண்டிக்கும் அறிகுறியாக சபையை விட்டு வெளியேறிவிட்டனர் எனத் தெரியவருகிறது.

தீர்க்க முடியாத

பிரச்சினைகளே இல்லையாம்

'கம்யூனிஸ்டு கட்சி எல்லாவிதமான பிரச்சினைகளையும் தீர்க்கும் ஆற்றல் வாய்ந்தது,' என்று சோவியத் யூனியனிலுள்ள இளைஞருக்குச் சொல்கிறார்கள்.

"வாலிப நண்பனே, வாழ்க்கையில் துன்பங்கள் நேரும் போதெல்லாம் கட்சியைப் பற்றிய எண்ணம் உன் எண்ணத்தில் எழுவதாக! கட்சி அது பற்றி என்ன சொல்கிறது என்பதை உடனே அறிந்துகொள்வாயாக! மக்களது நன்மைக்காக உழைக்கவும், போர் செய்யவும், வாழவும் உனக்கு படிப்பிப்போர் கம்யூனிஸ்டுகளே! நாம் நமது வாழ்க்கையில் கண்ட நன்மைகளும், பெற்ற இன்பங்களும் கம்யூனிஸ்டு கட்சியால் அடைந்தவைகளே!"

நோக்கங்களில்

மாறுதல் இருக்காதாம்!

அமெரிக்கத் தலைவர் ஐசன்ஹோவர், பத்திரிகை நிருபர் மாநாடு ஒன்றில் பின்வருமாறு பேசினர்:—

"சோவியத் ஆட்சிக் குழுவில் மாறுதல் நிகழ்ந்திருக்கிறது; இந்த மாறுதலால், உலகத்தில் யாதேனும் மாறுதல் ஏற்படுமா என்பது இன்னும் தெரியவில்லை; இன்னும் சிறிதுகாலம் அது தெரியாது; நமது அடிப்படைக் கொள்கையில் அதனல் மாறுதல் நிகழாது; நமது கொள்கைகள் நிறைவேற நாம் கையாளும் அடிப்படை முறைகளிலும் மாறுதல் ஏற்படாது; நீதியும், நிலைப்பதுமான சமாதானம் வேண்டும் என்பதும், அதன் பொருட்டு உழைக்கும் போது நாம் வலிமையுள்ளவர்களாக இருக்கவேண்டுமென்பதும், நம்முடைய நண்பர்களும் வலிமையுள்ளவர்களாகுமாறு நாம் உதவி செய்யவேண்டுமென்பதும் நமது கொள்கைகள்."

'ஜின்னு மாளிகையை ஏலம் விடக்கூடாது'

பாகிஸ்தான் வாங்கக்கூடுமாம்

இந்தியாவின் நல்லெண்ணத்தின் அறிகுறியாகக் கோரிக்கை

கராச்சி, மார்ச். 1—

காலஞ்சென்ற காயிதே அஃஜம் ஜின்ஞ அவர்களின் பம்பாய் 'மவுண்ட் பிளசண்ட்' மாளிகையை ஏலத்தில் விற்றுவிடுமாறு இந்தியப் பேரரசு ஏற்கனவே கட்டளையிட்டிருந்தது. அக்கட்டளையை நிறைவேற்ற வேண்டாம் என மீண்டும் உத்தரவு பிறப்பித்திருப்பதாகத் தெரியவருகிறது.

அம்மாளிகை விற்கப்படும் என ஏற்கனவே செய்தித் தாள்களில் விளம்பரம் செய்யப்பட்டுமிருந்தது.

விற்கக்கூடாது என்ற மறு உத்தரவிற்குரிய உண்மை காரணம் தெரியவில்லையாஞலும், லியாகத் அலிகான் வீட்டை வாங்கிக் கொண்டது போன்றே ஜின்ஞ மாளிகையையும் பாகிஸ்தான் அரசாங்கம் வாங்கிக்கொள்ளக் கூடும் என நம்பப்படுகிறது.

பாகிஸ்தான்மீது தனக்குள்ள 'நல்லெண்ணத்தின் அடையாளமாக' ஜின்ஞவின் மாளிகையை விட்டுவைக்க வேண்டுமெனவும், பாகிஸ்தான் அதைத் தனக்குரியதாக ஆக்கிக்கொள்ள வேண்டும் எனவும், 'டான்' பத்திரிகை ஒரு தலையங்கம் தீட்டியுள்ளது.

மாயமாய் மறைந்த விஞ்ஞானி

பிரிட்டனிலிருந்து 1950ல் மாயமாய் மறைந்துவிட்ட டாக்டர் பாண்டி கார்வோ என்ற விஞ்ஞானி தாம் அப்போது முதல் ரஷ்யாவில் வேலை பார்த்துக் கொண்டிருப்பதாக இப்போது தகவல் வெளியிட்டிருக்கிறாராம்.

அணுசக்தியை ஆக்க வேலைக்குப் பயன்படுத்துவதற்கான ஆராய்ச்சியில் தாம் ஈடுபட்டிருப்பதாக அவர் ரஷ்யப் பத்திரிகைகளில் எழுதியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்திரா காந்திக்கு இடம்

புதிய காங்கிரஸ் செயற்குழுவிற்கு, பண்டித நேருவின் மகளான இந்திரா காந்தியையும் முதல் முதலாக ஒரு உறுப்பினராக தேபர் நியமனம் செய்திருக்கிறார். இதுவரை அம்மையார் சமூக கலாச்சார சேவைகளிலேயே தனது முழு கவனத்தையும் செலவிட்டு வந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இதோ! இன்னுமொரு 'சமாதானம் விரும்பும்' நாடு

பிரிட்டனும் நீர்வளிக்குண்டு தயாரிக்கிறதாம்!

அணுசக்தி ஆராய்ச்சியில் ரஷ்யாவையும் மிஞ்சிவிட்டதாம்!

லண்டன், மார்ச். 1—

பிரிட்டன் நீர்வளிக்குண்டு தயாரிக்க ஆரம்பித்துவிட்டதாக பிரதமர் சர்ச்சில், மக்கள் சபையில் பாதுகாப்பு விவகாரம் மீது நடைபெற்ற விவாதத்தின்போது குறிப்பிட்டிருக்கிறார்.

"பிரிட்டனைவிட ரஷ்யாவிடம் அணுகுண்டுகள் அதிகம் இருக்கலாம்; ஆனல் அணுசக்தி ஆராய்ச்சியில் ரஷ்யாவை பிரிட்டன் மிஞ்சிவிட்டது எனலாம்," என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

"ஒருசில நீர்வளிக் குண்டுகளை வீசினுலே வெகு தூரத்திற்கு சர்வநாசம் விளையும்; இந்த சர்வ நாசத்திலிருந்து தப்ப எந்தவிதமான வழியும் கண்ணுக்குத் தெரியவில்லை.

"ஒரு விசித்திரமான நிலை உருவாகியுள்ளது; உயிருக்கு அபாயம் விளைவிக்கும் பிரதேசங்கள் வரம்பின்றி அதிகரித்துவருகின்றன; நவீன கால ஆராய்ச்சியின் விளைவு இது; இதனல் ரஷ்யாவுக்கே ஆபத்து அதிகம்.

"இன்னும் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில் நீர்வளிக் குண்டு உற்பத்தியில் கம்யூனிஸ்டு நாடுகளை சுதந்திர உலகம் மிஞ்சிவிடக் கூடும்; அதற்குமுன் ரஷ்யா வேண்டுமென்றே பெரும் யுத்தத்தில் இறங்குவது சாத்தியமில்லை; திடீர் தாக்குதலும் நடத்தாது; ஏனெனில், மற்ற நாடுகளும் அணு ஆயுதங்களாலேயே தாக்கும்; அதனல் இன்னும் நான்காண்டிற்கு யுத்தம் வராது என நம்பலாம்; ஆனல், இதற்குள் பெரிய மோதுதல் ஏற்பட்டுவிட்டால் இரு தரப்பினரும் அணு ஆயுதங்களை உபயோகிக்கமாட்டார்கள் என்றெண்ணுவது முட்டாள்தனமாகும்," என்றும் சர்ச்சில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆசிரியருக்குக் கடிதங்கள்:

'வாழ' வேண்டுமா-'வீழ' வேண்டுமா?

ஐயா,

1955—56 வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும்போது நிதி மந்திரி சுப்பிரமணியம் புதிதாக சில வரிகளைப் புகுத்தியிருக்கிறார். அதில், புகையிலைக்கும், அதன் வழி வந்த சுருட்டு, பீடி, சிகரெட்டுகளுக்கும் விற்பனை வரி விதிக்க முன்வந்துள்ளார்; இது பெரிதும் விவாதிக்கப்படக்கூடிய விஷயம்.

புகையிலை மீது 1944-ம் ஆண்டு வரை இம்மாநில சர்க்காரும் வரி விதித்தே வந்தார்கள்; ஆனல் மத்திய அரசாங்கம் அதன்மீது பளுவான கலால் வரி (பவுண்டு 1-க்கு ரூ. 0-14-0 வீதம்) விதித்த படியால்தான், சென்னை அரசாங்கத்தை வரி விதிக்க வேண்டாமென்று தடுத்து, தானே அதற்கு நஷ்டஈடும் கொடுத்து வந்தது.

இப்போது மத்திய அரசாங்கம் தன்னுடைய நஷ்ட ஈட்டை நிறுத்திவிட்டது என்பதற்காக, இம்மாநில சர்க்கார் வரி விதிப்பதானது அடாத செய்கையாகும் இவர்கள், மத்திய அரசாங்கத்தை நஷ்ட ஈட்டை நிறுத்தவேண்டாம் என்று சொல்லட்டும்—அல்லது கலால் வரி பளுவைக் குறையுங்கள் என்று சொல்லட்டும். இரண்டையும் விட்டு விட்டு, நாங்களும் புதிதாக வரி விதித்து வசூலித்துக் கொள்கிறோம் என்றால், பிறகு இந்த நாட்டிலேயே மக்கள் இருக்க முடியாத நிலை ஏற்பட்டுவிடும்.

பீடி, சுருட்டுத் தொழில் இந்த நாட்டுக் குடிசைத் தொழில்கள் ஆகும். 1953—54-ம் ஆண்டில் மட்டும் 11,76,81,000 பவுண்டு பீடிகளும், பல கோடி பவுண்டு சுருட்டுகளும் உற்பத்தியாக்கப் பட்டு செலவழிக்கப்பட்டுள்ளன. இவைகள் இயந்திரங்களால் செய்யப்பட்டவை அல்ல—பல லட்சக் கணக்கான தொழிலாளர்களால் தயாரிக்கப்பட்டவையாகும்.

மேலும் பல வசதிகளைச் செய்து காப்பாற்றப்பட வேண்டிய இந்தக் குடிசைத் தொழில்களை, ஒருபுறம் மத்திய சர்க்காரும், மற்றொருபுறம் சென்னை சர்க்காரும், தாங்க முடியாத வரிகளைப் போட்டு சாகடிக்கக் கூடாது.

அது மட்டுமல்ல; சர்க்கார், 'புகையிலைக்கும், அதன் வழி வந்த பீடி, சுருட்டு'—என்று கொண்டுபோவதன் கருத்து, ஒரு கட்டத்தில் புகையிலைக்கும், பிறகு அதே புகையிலையை வாங்கி, பீடியாகவோ, சுருட்டாகவோ சுற்றி விற்கும்போது மறுமுனையிலும் அதற்கு வரி விதிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது; எனவே, ஒரே புகையிலைக்கு இரண்டு இடங்களில் வரி விதிக்கப்படுகிறது.

விற்பனை வரியாக இதுவரை அரசாங்கம் மற்ற பொருள்களின் மீது $1\frac{1}{2}$ சதவீதம்—அதாவது, ரூபாய்க்குக் காலணு வரிதான் வசூலித்து வருகிறது; ஆனல், இப்போது, புகையிலை பீடிகளுக்கு ஐந்து சதவீதம்-அதாவது ரூபாய்க்கு ஏறத்தாழ பத்து பைசா வீதம் விதிக்கப்பட இருக்கிறது. இது மிகவும் அபாயகரமானதாகும்.

காப்பாற்றப்படக்கூடிய குடிசைத் தொழில்களாகிய பீடி, சுருட்டுத் தொழில்களுக்கு ஆதரவு கொடுப்பதைவிட்டு, புகையிலையாக ஒரு வரியும், பீடியாக சுருட்டிய பிறகு மீண்டும் மற்றொரு வரியும், மத்திய அரசாங்கத்தாரால் கலால் வரியும் விதிக்கப்பட்டு, அதுவும் $1\frac{1}{2}$ சத விற்பனை வரியை ஐந்து சதவீதமாகவும் வசூலிக்கத் திட்டமிடப்பட்டுள்ள இந்த வரவு-செலவுத் திட்டத்தால் பல லட்சக் கணக்கான தொழிலாளர்களும், அவர்களை நம்பி வாழும் குடும்பங்களும், மேற்படி புகையிலை, பீடி, சுருட்டுகளை உபயோகிக்கும் பல கோடிக்கணக்கான பொதுமக்களும் பாதிக்கப்படுவார்கள்; எனவே, சென்னை அரசாங்கம் இந்த ஏற்பாடுகளைக் கைவிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

ஆர். நாகசுந்தரம்,
திருச்சி : 28-2-55

மக்கள் பொறுமையை சோதிப்பதா?

ஐயா,

திருச்சி மாவட்டக் கழகத்தின் நிர்வாகத்தின் கீழ் செந்துறையிலிருக்கும் மருத்துவ நிலையம் கடந்த ஒரு வார காலமாக பூட்டப்பட்டு 'சீல்' வைக்கப்பட்டுள்ளது. இம்மருத்துவ நிலையம் கடந்த ஒரு மாத காலமாக, மருத்துவர்கள் யாருமே இல்லாமல் ஒரு 'கம்பவுண்டரி'ன் மேற்பார்வையில் மட்டும் நடைபெற்று வந்தது. 17–2–55 அன்று மாலை அக்கம்பவுண்டரும் வெளியேற்றப்பட்டு, மருத்துவ நிலையம் பூட்டப்பட்டு, சீல் வைக்கப்பட்டும் விட்டது. தினந்தோறும் நூற்றுக்கணக்கான மக்கள் சிகிச்சைக்கென வந்தும் ஏமாற்றம் அடைந்து திரும்புகிறார்கள். செந்துறை வட்டத்திலிருந்து ஏராளமான வரிப் பணம் வசூலிக்கப்பட்டும், மேலதிகாரிகள் இது விஷயத்தில் ஒன்றும் செய்யாமல் இருப்பது மக்களின் பொறுமையை சோதிப்பதாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏ. பரமசிவம்,
செந்துறை

* * *

இது உண்மையா?

ஐயா,

தஞ்சை மாவட்டக் கழகத் தலைவருக்கு தஞ்சையில் தேநீர் விருந்து நடத்த, மாவட்டக் கழகப் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களிடமிருந்து 6000 ரூபாய் வரை வசூலித்துக் கொடுக்கும்படியும், அத்தொகை பூராவையும் இம்மாத சம்பளத்திலேயே வசூலிக்கும்படியும் தலைமை ஆசிரியர்களுக்கு மாவட்டக் கழகச் செயலாளரிடமிருந்து தகவல் வந்துள்ளதாகவும், அதன் பேரில், இவ்வூர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களிடம் தலா ரூ. 7 வீதம் சம்பளத்தில் பிடித்துக் கொள்வதாகத் தலைமை ஆசிரியர் மற்ற ஆசிரியர்களிடம் சொல்லி இருக்கின்றார் என்றும் தெரிகிறது. இம்மாதிரி ஏழை ஆசிரியர்களிடம் பணம் வசூலித்து அதைக் கொண்டு மாவட்டக் கழகத் தலைவருக்கு தேநீர் விருந்து நடத்துவதும், ஆசிரியர்களுக்குத் தொல்லை கொடுப்பதுமான செயலாளரின் போக்கு வெறுக்கத்தக்கது. ஆகையால் இது விஷயத்தை மாவட்டக் கழகத் தலைவரும், சர்க்காரும் கவனித்து உடனடியாகப் பணம் வசூலிப்பதை நிறுத்திவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எஸ். கே. முகம்மது உசேன்
முத்துப்பேட்டை

திருமணங்கள்

17—2—55 காலை $9\frac{1}{2}$ மணிக்கு, புதுக்கோட்டை தி. மு. கழகத் தோழர் அ. மாணிக்கத்திற்கும்—சாந்தனுதபுரம் கழகத் தோழர் ரெ. வீரையாவின் தங்கை தனம் அம்மையாருக்கும் தோழர் முடியரசன் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தியும், சீர்திருத்தத் திருமணங்கள் நடைபெறவேண்டுவதின் அவசியம் குறித்தும் தோழர் முடியரசன் சொற்பொழிவாற்றினர். இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ 1 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

25—2—55 காலை $7\frac{1}{2}$ மணிக்கு சின்னமருதூரில், தோழர் வரதப்பன்—தோழியர் பழனியம்மாள் திருமணம், மணமகன் இல்லத்தில், தோழர் இரா. சண்முகம் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் பலர் சீர்திருத்தத் திருமணத்தின் அவசியம் பற்றி சொற்பொழிவாற்றினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

பிரபலகம்யூனிஸ்டு தலைவர் நாகி ரெட்டி தோல்வி

ஆந்திரத் தேர்தல் நிலவரம்

கர்னூல், மார்ச். 2—

ஆந்திரத் தேர்தலில் இதுவரை முடிவு அறிவிக்கப்பட்டுள்ள 80 இடங்களில் கம்யூனிஸ்டுகள் 4 இடங்களை மட்டுமே பெற்று படு தோல்விக்காளாகியுள்ளனர்.

மிகப் பிரபலமானவர்களும், தலைவர்கள் என விளம்பரப்படுத்தப்பட்டவர்களும் தோல்வியால் அணைக்கப்பட்டிருக்கின்றனர்.

தங்களின் 'கோட்டைகள் கோட்டைகள்' என்று கூறிக் கொண்டிருந்த இடங்களெல்லாம் சிதறுண்டுபோன பரிதாபங்கண்டு, கம்யூனிஸ்டு தலைவர்கள் அதிர்ச்சியுற்றிருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

தோல்வியால் வெல்லப்பட்ட கம்யூனிஸ்டுகளில் முக்கியமானவர்கள் டி. நாகி ரெட்டியும், அனுமந்தராவும், இன்னுஞ் சிலருமாவர்.

நாகிரெட்டி, கலைக்கப்பட்ட ஆந்திர சட்ட சபையில் எதிர்க் கட்சித் தலைவராயிருந்தவர்.

இன்னும் இருவர் கம்யூனிஸ்டு கட்சியின் மத்திய கமிட்டி அங்கத்தினர்களாவர்.

ஐந்து கம்யூனிஸ்டுகள் ஜாமீன் தொகை இழந்திருக்கின்றனர்.

தேர்தல் நிலவரம்

காங்கிரஸ் முன்னணி —(காங்கிரஸ்: 47; கிருஷிக்லோக்: 11; பிரஜா கட்சி: 1)	59
கம்யூனிஸ்டு	4
ம. சோ. கட்சி	5
சுயேச்சை	12
ஜன சங்	0

மொத்தம் 80 இடங்களுக்கு மட்டுமே முடிவு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

1954-ல், இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட சைக்கிள் சிறுபாகங்கள், துணைச் சாதனங்கள் ஆகியவற்றின் உற்பத்தி அளவு, அதற்கு முந்திய ஆண்டைவிட 25 சதவிகிதம் அதிகமாகும்.

கழகக் கூட்டங்கள்

★

இரட்டணை (கிராமம்)

5—3—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: த. கோ. பக்தவச்சலன்
பேசுபவர்:
இரா. நெடுஞ்செழியன்

வேலூர் (சேலம்)

வ. உ. சி. திடலில்
5—3—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: இரா. இரத்தினசபாபதி
பேசுவோர்:
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
சத்தியவாணிமுத்து
டி. பி. மூர்த்தி
வே. கா. இராசு
டி. ஆர். முத்து
வி. எ. இலக்குமணன்

மயில்ரங்கம்
(தாராபுரம் வட்டம்)

5—3—55 மாலை 6 மணிக்கு
மாரியம்மன் கோவிலுக்கு அருகில் அமைந்திருக்கும் சௌந்திர பாண்டியன் அரங்கில்
தலைவர்:
கன்னிவாடிப் பெரியார் கே. எஸ். எஸ்.
பேச்சாளர்கள்:
என். வி. நடராசன்
மே. சி. சிதம்பரனார்
கோதை பொன்னப்பா

'கல் சுமந்த கனகன்'— நாடகம்

5—3—55 மாலை 5-30 மணிக்கு சென்னை எழும்பூர் மியூசியம் தியேட்டரில், சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி கட்டட நிதிக்காக, அப்பள்ளி மாணவ மன்றத்தாரால் 'கல்சுமந்த கனகன்' என்ற நாடகம், தோழர் கே.ஆர் இராமசாமி தலைமையில் நடைபெறும்.

அ. பொன்னம்பலனர்

தோழர் அ. பொன்னம்பலனர் அவர்கள் கோவை மாவட்டச் சுற்றுப் பயணத்திற்குச் சென்று வந்த பிறகு உடல் நலமில்லாமல் தொண்டைப் புண், இருமல், காய்ச்சல் ஆகிய வைகளால் பாதிக்கப்பட்டு, டாக்டரிடம் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வைத்தீஸ்வரன் கோவில்

5—3—55 சனிமாலை 6மணிக்கு
வைத்தீஸ்வரன் கோவில் மேலவீதியில்
தலைவர்: த. இராமசாமி
பேச்சாளர்கள்:
என். கிட்டப்பா
கே. எஸ். சௌந்தரராசன்

★

புதுவையில் தி. மு. க. திறப்பு விழாக்கள்

"புதுவை தி. மு. கழகத்தின் கிளைகளான தேங்காய்த் திட்டு, உழவர்கரை, முதலியார் பேட்டை, ஒர்லேயன்பேட் ஆகிய நான்கு ஊர்களிலுமுள்ள தி. மு. கழகங்களின் திறப்பு விழாக்கள் 6-3-55 ஞாயிறு காலை 8 மணி முதல் 12 மணி வரை ஆங்காங்கே நடைபெறும். சி. பி. சிற்றரசு கழகக் கொடிகளை ஏற்றுவித்துத் திறப்பு விழா வாற்றுவர்."

பொதுக் கூட்டம்

"அன்று மாலை 6 மணிக்கு புதுவை ஒதியஞ்சாலை மைதானத்தில் தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் புதுவை தி. மு. கழகத்தின் சார்பில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர் சி. பி. சிற்றரசு "திராவிடம் ஏன் பிரிய வேண்டும்" என்பது பற்றி சொற்பொழி வாற்றுவார்கள்," என்று புதுவைத் தி. மு. க. செயலாளர் அறிவிக்கிறார்.

[குறிப்பு:— மேற்கண்ட நிகழ்ச்சிகளில் தோழர் ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ., அவர்கள் கலந்துகொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.]

சிறப்புச் சொற்பொழிவு

(தி. மு. கழக தலைமை நிலைய அனுமதி பெற்றது)

★

★ மக்களை வாழவைக்க மதக் கொடுமையை எதிர்த்தான்— பேசாத வாய்களைப் பேச வைத்தான்!

★ மதவாதிகள் மருண்டனர்; அரசர்கள் அஞ்சினர்— அதிகாரம் அவனுக்கு எதிராகத் திரும்பியது!

★ உடல் பதற—உயிர் துடிக்க—கொளுத்தப்பட்டான்

புருனோ

அம்மாவீரனின் சோக வரலாற்றினை

தோழர் இரா. நெடுஞ்செழியன்

அழகுதமிழில் விளக்குகிறார்

4-3-55 வெள்ளி மாலை 6-30 மணிக்கு
சென்னை கோகலே மண்டபத்தில்

நன்கொடை: அணா 8; அணா 4

—சென்னை மாவட்ட தி. மு. கழகம்

சேலம் நகர தி. மு. கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்

5—3—55 சனி இரவு 9 மணிக்கு 13-வது வட்டம் கல்லாங்குத்து கிளையில் மேற்படி கூட்டம் நடைபெறும் அதுசமயம், பொதுக்குழு முடிவுப்படி 20—3—55-ல் கண்டனக் கூட்டம் நடத்துவது: பொதுச் செயலாளர் அறிக்கைப்படி கிளைகள் தேர்தல் நடத்துவது; பொதுக் குழு முடிவுகள்— ஆகியவை பற்றி ஆலோசித்து முடிவு செய்யப்படும்.

தூங்குவதற்கு வசதி

இரயிலில் மூன்றும் வகுப்பு வண்டிகளிலும் பிரயாணிகள் தூங்குவதற்கான வசதியுடைய புது மாதிரி பெஞ்சுகள் தயாராக்கிக் கொண்டிருப்பதாக, இரயில்வே உதவி மந்திரி அளகேசன் டெல்லி மேல் சபையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தப்புக் கணக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏழை விவசாயிகளும் கட்சியின் தேர்தல் அறிக்கையினால் கவரப்பட்டதும், அவர்களிடம் சென்றபோது அவர்கள் காட்டிய ஆர்வமும், எதிர்பாராத வகையில் அமையப்பெற்ற பொதுக் கூட்டங்களும், கம்யூனிஸ்டு கட்சியுடையவும், அதன் தலைமையுடையவும் இந்தத் தவறான மதிப்பீட்டிற்கு அடிப்படையாயமைந்தன,"

என்றும், அந்த அறிக்கையில் காணப்படுகிறது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

'கம்யூனிசம்' என்பதைப் பயங்கரப் பொருளாக்கிக் காட்ட, வேண்டுமென்றே காங்கிரஸ் முன்னணியினர் நடுத்தர மக்களிடையேயும், வியாபாரிகளிடையேயும் ஒரு பெருங் குழப்பத்தை உண்டு பண்ணி விட்டனர்;

"பல்வேறு கட்சிகளுடையவும் தேர்தல் பிரச்சாரத்தில் புதைந்துள்ள பிரச்சினைகள் குறித்து சிந்தித்துப் பார்க்க மத்திய தர வர்க்க மக்களுக்கு சந்தர்ப்பம் தரப்படவில்லை; அந்த வகையில் தற்காலிகமாகவாவது காங்கிரஸ் முன்னணி இந்தக் குழப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு விட்டது"

27—3—55-ல் தி. மு. கழக சிற்றூர்-பேரூர்-நகரக் கிளை செயற்குழுத் தேர்தல்

10—4—55-ல் மாவட்டக் கிளைச் செயற்குழுத் தேர்தல்

24—4—55-ல் புதிய பொதுக்குழுக் கூட்டம்: பொதுச்செயலாளர் தேர்தல்

பொதுச்செயலாளர் அறிவிப்பு

★

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் இவ்வாண்டு நடைபெற வேண்டிய தி. மு. கழகத் தேர்தல்கள் பற்றிக் கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளார்கள்; அது வருமாறு:—

தி. மு. கழக சிற்றூர் (சிறிய பஞ்சாயத்து-Minor Panchayat)க் கிளை, பேரூர் (பெரிய பஞ்சாயத்து-Major Panchayat)க் கிளை, நகர (நகராட்சி-Municipality)க் கிளை, சென்னை வட்ட (Division)க் கிளை ஆகியவற்றின் புதிய செயற்குழுத் தேர்தல்கள் நடைபெற, 27—3—55 ஞாயிற்றுக்கிழமை தேர்தல் நாளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

எல்லா மாவட்டங்களின் செயற்குழுத் தேர்தல் நாளாக, 10—4—55 ஞாயிற்றுக்கிழமை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

புதிய பொதுக்குழு கூடிப் பொதுச்செயலாளரைத் தேர்ந்தெடுக்கும் நாளாக, 24—4—55 ஞாயிற்றுக்கிழமை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

1—3—55-ஆம் நாளிலிருந்து 31—4—55-ஆம் நாள் வரையில் புதிய உறுப்பினர்கள் சேர்ப்பது நிறுத்தப்பட்டிருக்கிறது. 28—2—55-ம் நாள்வரை உறுப்பினரானவர்கள் மட்டுமே கிளைக் கழகத் தேர்தலில் பங்கு கொள்ள வேண்டும். 28—2—55-ஆம் நாளுக்கு முன்பு அமைக்கப்பட்ட கிளைக் கழகங்கள் மட்டுமே தேர்தல் நடத்த வேண்டும். புதிய கிளைக் கழகங்கள் அமைப்பது 1—5—55-க்கு மேல்தான் நடைபெற வேண்டும்.

கிளைக் கழகங்கள் அண்மையில் தேர்தல் நடத்தியிருந்தாலும் 27—3—55-ஆம் நாளில் மீண்டும் கூடி உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தேர்தல் முடிவுகளைக் கிளைக் கழகப் பதிவுச் சீட்டில் எழுதி, 31—3—55-க்குள் தலைமைக் கழகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். கிளைக் கழகப் பதிவுச் சீட்டு தலைமைக் கழகத்திலிருந்து 10—3—55-ஆம் நாள் அனுப்பி வைக்கப்படும். பதிவுச் சீட்டு கிடைக்கப்பெறாத கிளைக் கழகங்கள் உடனே தலைமைக் கழகத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

27—3—55-ல் தேர்தல் நடத்திப் பதிவுச் சீட்டைத் தலைமைக் கழகத்துக்கு அனுப்பி வைக்கும் கிளைகள் மட்டுமே மாவட்டக் கிளைச் செயற்குழுத் தேர்தலில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பெறும்.

கிளைகளின் தேர்தல் விதிகளும், முறைகளும் அடுத்த அறிக்கையில் வெளியிடப்படும்.

'அறிவகம்',
சென்னை.
1—3—55

சி. என். அண்ணாதுரை,
பொதுச்செயலாளர்

புகார் விசாரிக்கப்படும்

காஸா அருகே, எகிப்து இராணுவத்திற்கும், இஸ்ரேல் இராணுவத்திற்குமிடையே நடந்த சண்டை பற்றி எகிப்து செய்துள்ள புகாரை விசாரிக்க ஐ. நா. பாதுகாப்பு சபை வெள்ளிக்கிழமையன்று கூடுகிறது.

அரபு கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தத்தின் கீழ் காஸா எல்லை நிலைமையை சமாளிக்க எகிப்துக்கு இராணுவ உதவி அளிக்க தயாராக இருப்பதாக ஈராக் அறிவித்துள்ளதாம்.

நெய்வேலி திட்ட

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சென்னை அரசாங்கம் இதுவரை சுமார் ரூ. 94 கோடி வரை கடனைப் பெற்றிருக்கிறது. இதை எப்படி திருப்பிக் கொடுப்பது என்பதைக் குறித்து அரசாங்கம் சிந்திக்கவேண்டும்."

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி என்